**SEC 4 O-LEVEL EXAM REVISION WORKSHEETS (PAPER 2)**
**உயர்நிலை 4 சாதாரண நிலை தேர்வுப் பயிற்சித்தாள் (தாள் 2)**

# பொருளடக்கம்


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1 | தேர்வுத்தாள் 1 | 1 - 10 |
| 2 | தேர்வுத்தாள் 2 | 11 - 20 |
| 3 | தேர்வுத்தாள் 3 | 21 - 30 |
| 4 | தேர்வுத்தாள் 4 | 31 - 40 |
| 5 | தேர்வுத்தாள் 5 | 41 - 50 |
| 6 | தேர்வுத்தாள் 6 | 51 - 60 |
| 7 | தேர்வுத்தாள் 7 | 61 - 70 |
| 8 | தேர்வுத்தாள் 8 | 71 - 80 |
| 9 | தேர்வுத்தாள் 9 | 81 - 90 |
| 10 | தேர்வுத்தாள் 10 | 91 - 100 |
| 11 | தேர்வுத்தாள் 11 | 101 - 110 |
| 12 | தேர்வுத்தாள் 12 | 111 - 120 |
| 13 | அருஞ்சொற்கள் (தேர்வுத்தாள் 1 to 12) | 121 - 127 |
| 14 | விடைத்தாள்கள் | 128 - 150 |


WORDSMITH
BEYOND LEARNING
EQ SKILLS = JUMP grades + achieve Big

# தேர்வுத்தாள் 1

70

**'அ' பிரிவு**

**A1 மரபுத்தொடர்களும், இணைமொழிகளும் (10 மதிப்பெண்கள்)**

**கீழ்க்காணும் வாக்கியங்களில் கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கேற்ற சொற்றொடர்கள் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கேற்ற மிகப் பொருத்தமான சொற்றொடரைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

Q1 ஆபத்து வேளைகளில் __________________ முடிவெடுக்காமல் நித்தமும் நிதானமாகச் சிந்தித்துச் செயல்படுவது மிகவும் அவசியமாகும்.

Q2 பாரிவள்ளல், இல்லை என வருபவர்களுக்கு __________________ உதவும் கொடை வள்ளலாகத் திகழ்ந்தவர் என்பதனால் அவரை அவ்வூர் மக்கள் **துதித்தனர்**.

Q3 தனக்குப் பரிந்துரைக்கப்பட்டப் பணியை __________________ உடனுக்குடன் செய்து முடித்து துருதுருவென செயல்படும் குணம் கொண்டவன் மாறன்.

Q4 உண்மை நிலவரத்தை அறிந்து கொள்ள **பிரதிவாதி**யைப் பல குறுக்குக் கேள்விகளைக் கேட்டு __________________ வழக்கறிஞர்.

Q5 கண்ணன் தன் பாலிய சிநேகிதியின் கைகடிகாரத்தைத் தொலைத்ததால் அதனை __________________ அவனது மறைந்த பாட்டியின் விலையுயர்ந்த மூக்குக் கண்ணாடியை கொடுத்தான்.

| | |
|---|---|
| (A) ஆறப்போடாமல் | (B) ஆழம் பார்த்தார் |
| (C) வலைவீசினார் | (D) இரண்டுபடாமல் |
| (E) அள்ளியிறைத்து | (F) அவசரக்குடுக்கையாக |
| (G) அள்ளிக் கொடுத்து | (H) சிட்டாய்ப் பறந்து |
| (I) ஈடேற | (J) ஈடுகட்ட |

WORDSMITH BEYOND LEARNING EQ SKILLS = Jump grades + achieve Big

**A2 முன்னுணர்வு கருத்தறிதல் (10 மதிப்பெண்கள்)**

**கீழ்வரும் பகுதியில் கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கேற்ற அமைப்புச் சொற்கள் பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கேற்ற மிகப்பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

இந்த உலகில் உள்ள **மேதை**களை நாம் வினவினால் அவர்கள் அனைவரும் உயர்நிலையை அடைய வாசிப்பு பெரும் பங்கு வகித்ததாகக் கூறுவார்கள். வாசிப்பு ஒரு மனிதனுக்கு முழுமையான அறிவை Q6. ______________________________ என்றால் அது மிகையாகாது. இத்தகைய சிறப்பு வாய்ந்த வாசிப்புப் பழக்கமானது, நவீன காலத்தின் அதியுயர் தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகளின் பயன்பாட்டினால் மக்களிடையே **அருகி** வருகிறது. புதிய தகவல்களைக் கற்று அறிவை வளர்த்துக் கொள்ளவும், பரந்த உலக அறிவைப் பெற்றுக்கொள்ளவும் Q7. ______________________________ அமையும் வாசிப்புப் பழக்கத்தை நமது அன்றாடப் பழக்கமாக்கி கொள்வது ஒவ்வொருவரின் தலையாய கடமையாகும். வாசிப்பது என்பது பாடப்புத்தகங்களுடன் நின்றுவிடாமல் அதைத் தாண்டியதாக இருக்க வேண்டும். பொதுவாகப், பள்ளி மற்றும் கல்லூரியில் படிப்பவர்கள் பாடப்புத்தகங்களைப் படிப்பதையே வாசிப்பு என்று Q8. ______________________________ எண்ணுகின்றனர். அதுவே போதும் என்ற எண்ணத்தோடு பலர் நின்றுவிடுகின்றனர். ஆனால், அது வாசிப்பு ஆகாது என்பது நிறைய பேருக்கு இன்னும் புரியாமலே இருக்கின்றது. பாடப் புத்தகங்களைத் தாண்டி இவ்வுலகில் பல பொது அறிவை வழங்கக்கூடிய புத்தகங்கள் எவ்வளவோ உள்ளன. தரமான புத்தகங்களைத் தேடிச் சென்று வாசிப்பதால் நமது அறிவாற்றலைப் பன்மடங்காக Q9. ______________________________ கொள்ளலாம். மேலும், பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளிடம் வாசிப்பின் அத்தியாவசியத்தை உணர்த்தி அப்பழக்கத்தைக் கற்றுக் கொடுக்க வேண்டும். அவர்கள் வீட்டிலேயே தங்கள் வசதிக்கு ஏற்ப சிறு நூலகம் அமைக்கலாம். அவர்களோடு இணைந்து வாசிக்கலாம். மாணவர்களுக்கான பொதுத் தேர்வுகளும் போட்டிகளும் கூட பாடப் புத்தகங்களைத் தாண்டிய வாசிப்பின் Q10. ______________________________ உணர்த்துகின்றன. எனவே, இன்று முதல் வாசிப்பை உயிர் மூச்சாகக் கருதி செயல்படுவோம்!

| | |
|---|---|
| (A) தேவையை | (B) தவறாக |
| (C) உறுதுணையாக | (D) வழங்குகிறது |
| (E) வளர்க்கிறது | (F) ஏற்புடையதாக |
| (G) சரியாக | (H) உயர்த்தி |
| (I) பெருக்கி | (J) முக்கியத்துவத்தை |

WORDSMITH BEYOND LEARNING

**‘ஆ’ பிரிவு**

**B3 தெரிவுவிடைக் கருத்தறிதல் (10 மதிப்பெண்கள்)**

**பின்வரும் பனுவல்களைக் கருத்தூன்றிப் படித்து அவற்றிற்குரிய வினாக்களுக்கு விடையளிக்கவும். வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் நான்கு தெரிவுகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப்பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எழுத்தை எழுதுக.**

**பனுவல் 1**

நன்னெறிக் கதைகள் 11

**உண்மையான அன்பினை மரணத்தில் அறி**

நீலகரி மாவட்டத்தில் மரணித்த முதியவரின் உடலை அடக்கம் செய்வதற்கான ஏற்பாடு நடந்துகொண்டிருந்தது. 1500 ரூபாய் தரவேண்டும் என்றும் பணத்தைத் தந்தால்தான் உடலை **அடக்கம்** செய்ய அனுமதிப்பேன் என்றும் அங்குள்ளவர் கூறியபோது மூன்று மகன்களுக்கிடையில் **விவாதம்** நிகழ்ந்து மூவரும் பணம் தர மறுத்தனர். அப்பொழுது அவரின் மகள் ஓடிவந்து தன்னிடம் உள்ள நகைகளைக் கழற்றிக் கொடுத்து மீதப் பணத்தைப் பிறகு தருவதாகக் கூறியதோடு தன் அப்பாவின் உடல் அடக்கத்தைத் தடை செய்யாதபடி **மன்றாடி**னாள். அப்போது ஒருவர், **“தனது மறைவுக்குப் பிறகு நான் அவருக்குக் கொடுக்கவேண்டிய பணத்தைத்**

நன்னெறிக் கதைகள் 12

**தகுதியானவரிடம் ஒப்படைக்கச் சொன்னார்”** என்று கூறி பணத்தைத் தந்தார்.

இதேபோல ஒவ்வொரு பிள்ளையும் தன் பெற்றோரை நேசித்துப் போற்ற வேண்டும். அரிதான விஷயங்களில் உன்னதமான அன்பு முதன்மையாகும். பிள்ளைகள் பெற்றோரின் அருமையை உணர்ந்து அன்பினை வெளிப்படுத்துவது சிறப்பு. உண்மையான அன்பு கிடைக்கும்போது புரியாத அருமை இறந்தபின்தான் புரியும். ஆகவே, நம்மைச் சீராட்டி வளர்க்கும் பெற்றோரை இறுதிவரை உண்மையான அன்புடன் அரவணைக்க வேண்டும்.

-முற்றும்-

**<u>வினாக்கள்</u>**

Q11 “தனது மறைவுக்குப் பிறகு நான் அவருக்குக் கொடுக்கவேண்டிய பணத்தைத் தகுதியானவரிடம் ஒப்படைக்கச் சொன்னார்” என்னும் வாக்கியத்தில் “தகுதியானவரிடம்” என்பது எதைக் குறிக்கிறது?

(A) கடனை உடனே திருப்பிக் கொடுக்கும் பிள்ளை

(B) தன்மேல் உண்மையான அன்பும் பற்றும் கொண்ட பிள்ளை

(C) தன்மேல் உண்மையான நேசம் கொண்ட மகன்

(D) தன் மரணத்திற்குப் பின் தன்னை அடக்கம் செய்ய முன் வருபவர் ( )

Q12 பிள்ளைகள் அவர்களின் பெற்றோரிடம் உண்மையான அன்பினை வெளிப்படுத்துவது எவ்வாறு உறுதி செய்யப்படுகிறது?

(A) பெற்றோரின் உண்மையான அன்பு கிடைக்கும்போது புரிந்து கொள்வது

(B) பெற்றோரின் கடனை அடைத்து உண்மையாக நடந்து கொள்வதன் மூலம்

(C) பெற்றோரை இறுதிவரை உண்மையான அன்புடன் அரவணைப்பதன் மூலம்

(D) வாழ்வில் பெற்றோரின் அருமையை உணர்ந்து நடந்து கொள்வதன் மூலம் ( )

**பனுவல் 2**

**கலையுலகின் கலைத்துவம்**

பேரன் : தாத்தா, அக்காலத்தில் சினிமா படங்கள் எல்லாம் இருந்ததா?

தாத்தா : ஓ....இருந்ததே! அப்போதெல்லாம் சினிமா படங்களைப் பார்க்க நாங்கள் பல நாட்கள் காத்திருக்க வேண்டும். ஆனால், இக்காலத்தில் அப்படி இல்லையே. தற்போதைய கலையுலகம் பல புதுமைகளைப் படைத்த வண்ணமாகவே இருக்கின்றது.

பேரன் : ஆமாம் தாத்தா. அதன் அடிப்படையில், கலை வேற, இயந்திரம் வேறு என்ற நிலையைத் தாண்டி அறிவியல் சாதனங்களைப் பயன்படுத்திக் கலைத்துவத்தை வெளிப்படுத்தலாம் என்பது இக்காலத் திரைப்படங்கள் வாயிலாக நமக்கு எடுத்துரைக்கப்படுகின்றது.

தாத்தா : தற்காலத் திரைப்படங்களில் வேறு என்ன சிறப்புகள் உள்ளன?

பேரன் : தற்காலத்தில் வெளிவரும் பெரும்பாலான திரைப்படங்கள் வாசகர்களின் பொது அறிவைப் பெருகச் செய்ய வழிவகுக்கின்றன. எளிய மக்களுக்குத் தங்கள் ஊரைக் கடந்த வேற்றுமொழி, வெளிநாடுகளின் அமைப்பு, **ஊர்தி**களின் வகைகள், சமுதாய நிலை போன்றவற்றைத் தெரிந்துகொள்ள நல்ல வாய்ப்பாகத் திரைப்படங்கள் அமைகின்றன.

தாத்தா : அப்படியென்றால், பல்வேறு குடும்ப அமைப்புகள், பணத்தின் மதிப்பு, மக்களின் **மனோநிலை**, வாழ்க்கைத்தரம், உடை, அலங்காரம், கலாச்சாரம் என எல்லாக் **கோணங்களிலும்** ஓர் அடிப்படையான அறிமுகமும், விளக்கமும் தற்காலத் திரைப்படங்களைப் பார்க்கும் வாசகர்களுக்குக் கிடைக்கிறதல்லவா?

பேரன் : கண்டிப்பாகத் தாத்தா. திரைப்படத்தை மனமகிழ்வுக்கு மட்டும் பார்க்க வேண்டும் என்றில்லை. மாறாகப், **திரைப்படங்கள் பல்வேறு கோணங்களில் உபதேசம் செய்யும்** பெரிய பங்கையும் சிறப்பாக ஆற்றி வருகின்றன என்றால் அது மறுப்பதற்கு இல்லை.

தாத்தா : இக்காலத்தினர் திரைப்படங்களைக் கருத்தூன்றிப் பார்த்து தங்கள் வாழ்க்கைக்குத் தேவையானவற்றை எடுத்துக் கொள்ளவும் திரைப்படங்கள் உதவியாக இருக்கும் என்பதை உமது கருத்துகள் தெளிவாகக் கூறுகின்றன.

பேரன் : ஆமாம் தாத்தா. கண்டிப்பாக.

**<u>வினாக்கள்</u>**

Q13 இக்காலத் திரைப்படங்களின் வழி நமக்கு என்ன எடுத்துரைக்கப்படுகின்றது?

(A) பொது அறிவைப் பெருக வழிவகுக்க வேண்டும் என்பதை

(B) அறிவியல் சாதனங்கள் வழி கலைத்துவத்தை வெளிக்காட்டலாம்

(C) தொழில்நுட்பக் கருவிகளின் தேவை இல்லை என்பதை

(D) கலை வேறு இயந்திரம் வேறு எனும் நிலை தாண்டுவதை ( )

Q14 தற்காலத்தில் வெளிவரும் திரைப்படங்கள் எவ்வாறு வாசகர்களின் பொது அறிவைப் பெருகச் செய்கின்றன?

(A) எளிய மக்களின் மனோநிலையை விளக்குவதன் வாயிலாக

(B) தங்கள் சொந்த ஊரைத் தவிர்த்து பல ஊரின் கலாச்சாரத்தைத் தெரிவிப்பதன் வாயிலாக

(C) எல்லா கோணங்களிலும் பல நன்மையை அள்ளி தருவதன் வாயிலாக

(D) அடிப்படை விளக்கமும் அறிமுகமும் வழங்குவதன் வாயிலாக ( )

Q15 “திரைப்படங்கள் பல்வேறு கோணங்களில் உபதேசம் செய்யும்” எனும் தொடர் உணர்த்தும் கருத்து யாது?

(A) தற்போதைய கலையுலகம் மக்களுக்கு வெவ்வேறு வழிகளில் பயன்மிக்கதாக உள்ளதை

(B) இன்றையக் கலையுலகின் புதுமைகளை உணர்த்துகிறது

(C) மக்களின் மனோநிலை, வாழ்க்கைத்தரம், உடை, அலங்காரம், கலாச்சாரம் என எல்லாக் கோணங்களையும் உணர்த்துகிறது

(D) எளிய மக்களின் அறியாமையை உணர்த்துகிறது ( )




WORDSMITH

**B4 பிழை திருத்தம் (10 மதிப்பெண்கள்)**

**கீழ்க்காணும் பகுதியின் இடப்பக்கத்தில் ஐந்து வினாக்களின் எண்கள் இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் எதிரிலுள்ள வரியில் ஒரு பிழையான சொல் உள்ளது. அந்த ஐந்து வரிகளிலும் உள்ள பிழையான சொற்களைத் திருத்தி சரியான சொற்களை எழுதவும்.**

| | |
|---|---|
| | துறைகள் பல இவ்வுலகில் உள்ளன. அவற்றுள் விஞ்ஞானத்துறை இன்று மிகச் |
| Q16 | சிறந்ததாகக் கருதப்படுகிறது. இத்துரையில் ஈடுபட்டுள்ளவர்களே விஞ்ஞானிகள். |
| | அவர்கள் சாதாரணமாகத் தோன்றும் பொருள்களில் கூட புதுமை காண்பவர்கள். |
| | புதுமைகளுக்கு என்றும் பற்றாக்குறை கிடையாது. விஞ்ஞானிகள் தொடர்ந்து |
| Q17 | புதுமைகளைக் கண்டுபிடித்துக் கொண்டிருக்கின்றன. பாரமானி, நுண்ணோக்கி, |
| | தொலைநோக்காடி ஆகிய கருவிகளையும் மற்றும் மனிதச் சமுதாயத்திற்கு உதவக்கூடிய |
| | எத்தனையோ கருவிகளையும் விஞ்ஞானிகள் கண்டு பிடித்திருக்கின்றனர். இன்னும் |
| | கண்டுபிடித்துக் கொண்டிருக்கின்றனர். இன்று விஞ்ஞானத்துறையில் முன்னேறியுள்ள |
| Q18 | நாடே முற்போக்கானவை எனக் கருதப்படுகின்றன. இயற்கை இன்னும் நிறையப் |
| | புதுமைகளை மறைத்து வைத்துக்கொண்டிருக்கிறது. நோய்கள் பெருகியுள்ள இன்றைய |
| Q19 | உலகினுடைய இன்னும் புதுமையான மருந்து வகைகள் தேவைப்பட்டன. எனவே |
| | விஞ்ஞானிகள் இன்னும் கண்டுபிடிக்க வேண்டிய புதுமைகளுக்கு நாம் வரையறை |
| | கூறமுடியாது. புதியன கண்டுபிடிப்பதற்கு அவர்களை நாம் ஊக்குவிக்க வேண்டும். |
| | அரசும் சமுதாயமும் விஞ்ஞானிகளை நன்முறையில் பயன்படுத்த வேண்டும். அவர்களது |
| | பணி சிறக்க ஆதரவு நல்க வேண்டும். அறிவியல் ஆர்வத்தைப் பள்ளி மாணவர்களிடம் |
| Q20 | ஏற்படுத்த வேண்டும். அது மூலம் வருங்காலத்தில் அதிக எண்ணிக்கையில் |
| | விஞ்ஞானிகள் உருவாக வழிவகுக்க வேண்டும். ஆகவே, நிறைய விஞ்ஞானிகள் |
| | மூலம் நிறைய கண்டுபிடிப்புகள் இவ்வுலகில் உருவாக வேண்டும். |

Q16 ______________________________

Q17 ______________________________

Q18 ______________________________

Q19 ______________________________

Q20 ______________________________

## 'இ' பிரிவு

**C5 சுயவிடைக் கருத்தறிதல் (30 மதிப்பெண்கள்)**

**பின்வரும் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து அதையொட்டிய வினாக்களுக்கு உம் சொந்த நடையில் விடை தருக.**

வால்ட் டிஸ்னி உலக புகழ்பெற்ற **கேலிச் சித்திர** ஓவியராவார். 'மிக்கி மவுஸ்', 'டொனால்ட் டக்' போன்ற புகழ்பெற்ற கேலிச் சித்திர கதாப்பாத்திரங்கள் இவரின் **கைவண்ணமே**. உலக மக்களைச் சிரிக்க வைத்த சார்லி சாப்ளினுக்கு ஈடாகக் கற்பனை கதாப்பாத்திரம் மக்களைச் சிரிக்க வைத்தது என்றால் அது 'மிக்கி மவுஸ்' கதாப்பாத்திரமே. பெரியவர்களையும் குழந்தைகளாய் மாற்றி அவர்களைச் சிரிக்க வைத்ததும் 'மிக்கி மவுஸ்' தான். மேலும், மக்களின் **மனச்சோர்வை**யும் இது குறைத்தது.

வால்ட் டிஸ்னி 1920-ஆம் ஆண்டு ஐவெர்க்ஸ் என்பவருடன் சேர்ந்து தொடங்கிய தொழில் தோல்வியிலேயே முடிந்தது. பின் விளம்பரப் படங்கள் எடுக்கும் நிறுவனம் ஒன்றில் சேர்ந்து இயங்குபடத்தில் சில கேலிக்கைச் சித்திரங்களை வரையத் தொடங்கினார். அதுவும் தோல்வியைத் **தழுவியது**. மனம் தளராத டிஸ்னி 1923-ஆம் ஆண்டு தான் தயாரித்த 'Alice's Comedies'-ஐ ஹாலிவூட்டில் வெளியிட்டார். அந்த வருவாயில் டிஸ்னியும் அவரது சகோதரரும் இணைந்து 'The Walt Disney Company' மூலம் கேலிச் சித்திர படங்களைத் தயாரித்தனர். வால்ட் டிஸ்னி இதுவரை 26 முறை ஆஸ்காரை வென்றுள்ளார். ஆஸ்காருக்காக அதிக முறை **பரிந்துரைக்க**ப்பட்டவரும், அதிக முறை வென்றவரும் இவரே ஆவார். இவற்றோடு இன்னும் பல விருதுகளையும் வென்றுள்ளார்.

முகம், இரண்டு காதுகள் என வெறும் மூன்று வட்டங்களால் உருவானது 'மிக்கி மவுஸ்' எனும் எலியாகும். மிக்கிக்கு உருவம் தந்த டிஸ்னிதான் அதற்குக் குரலும் கொடுத்தார். இது கேலிக்கை கதாப்பாத்திரமாக மட்டுமல்லாமல், கருத்துச் சித்திரமாகவும் அமைகின்றது. 'மிக்கி மவுஸ்' கதை முதலில் கருப்பு வெள்ளை படமாக வெளியிட்டதைத் தொடர்ந்து வண்ணப் படமாக வெளியிடப்பட்டது.

பெரியவர்கள் முதல் சிறுவர்கள் வரை இக்கதாப்பாத்திரத்தை இரசிக்க தொடங்கினர். அதன் வளர்ச்சியாக 'மிக்கி மவுஸ்' தனது நண்பர்களுடன் சேர்ந்து மகிழ்வூட்டும் நிகழ்வுகளால் மக்களின் மன உளைச்சலை **அகற்றி**யுள்ளன. இது சிறுபிள்ளைகளிடையே, நட்புறவாடுதலின் அவசியத்தைக் கற்றுத்தந்துள்ளது என்றால் அது மிகையாகாது. வெவ்வேறான உயிரின வகையாக இருப்பினும் 'மிக்கி மவுஸ்' தன் நண்பர்களுடன் ஒற்றுமையாக இருப்பது, இரசிகர்களிடையே **மனிதத்தன்மை**யை வளர்த்துள்ளது என்று கூறலாம்.

இவ்வாறான வெற்றிகளுக்குக் காரணம் அவரது விடாமுயற்சியும் உழைப்பும் ஆகும். தோல்விகளை ஏணிப்படியாக்கும் **<u>வல்லமை</u>**யையும் அவர் கொண்டிருந்தார். தனது கலை திறமையை வலுப்படுத்தும் ஆற்றலையும் அவர் பெற்றிருந்தார். நேரத்தைப் பொன் போன்று மதித்து அவற்றைச் சரியாகப் பயன்படுத்திக்கொள்ளும் உத்திமுறைகளையும் அறிந்து வைத்திருந்தார். கலைத்துறையில் சாதிக்க எண்ணுபவர் இவரை **முன்னுதாரணமாகக்** கொண்டிருக்கலாம்.

**<u>வினாக்கள்</u>**

Q21 உலக அளவில் 'மிக்கி மவுஸ்' ஏன் பிரபலமானது? (5 மதிப்பெண்கள்)

______________________________________________

______________________________________________


______________________________________________

______________________________________________

______________________________________________

WORDSMITH
BEYOND LEARNING

Q22 மேற்கண்ட பனுவலைப் படித்துவிட்டு தினாவும் ராணியும் கருத்துரைக்கின்றனர்.




(அ) ராணியின் கருத்துக்கு ஆதரவாக 2-ஆம் பத்தியிலிருந்து தக்க சான்றுகளைக் கண்டறிந்து எழுதுக. (3 மதிப்பெண்கள்)

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

(ஆ) தினா ராணியின் கருத்தை முழுமையாக ஏற்றுக் கொள்ளாத காரணத்தை 2-ஆம் பத்தியை அடிப்படையாகக் கொண்டு எழுதவும். (3 மதிப்பெண்கள்)

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

Q23 'மிக்கி மவுஸ்'-இன் கதாப்பாத்திரம் எப்படிப்பட்டது? (4 மதிப்பெண்கள்)

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

Q24 மக்களிடையே 'மிக்கி மவுஸ்' எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியது? (5 மதிப்பெண்கள்)

WORDSMITH
BEYOND LEARNING
EQ SKILLS = JUMP gRADES + achieve Big

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

Q25 கட்டுரையாசிரியர் 'வால்ட் டிஸ்னியை முன்னுதாரணமாகக் கொள்ளலாம்' என்று கூறக் காரணம் என்ன? (5 மதிப்பெண்கள்)

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

Q26 பத்தி 2-இல் 'இலாபத்தில்' என்னும் பொருளை உணர்த்தும் சொல்லைக் கண்டறிந்து எழுதவும். (1 மதிப்பெண்)

________________________________________

Q27 பத்தி 4-இல் தோல்வி இல்லாமல் மேலோங்கி செல்லும் நிலையை எந்தச் சொல் உணர்த்துகிறது என்பதைக் கண்டறிந்து எழுதவும். (1 மதிப்பெண்)

________________________________________

பின்வரும் சொற்கள் பனுவலில் இடம்பெற்றுள்ளன. அவை உணர்த்தும் பொருளை எழுதவும். (3 மதிப்பெண்கள்)

Q28 கைவண்ணமே - ________________________________________

Q29 மனிதத்தன்மை - ________________________________________

Q30 வல்லமை - ________________________________________

**SEC 4 EXAM REVISION WORKSHEETS - LEVEL 1 (PAPER 2)**

**உயர்நிலை 4 சாதாரண நிலை தேர்வுப் பயிற்சித்தாள் (தாள் 2) - நிலை 1**

## அருஞ்சொற்பொருள்

| தேர்வுத்தாள் 1 | | | |
|---|---|---|---|
| **எண்** | **அருஞ்சொல்** | **பொருள்** | **English Meaning** |
| 1 | துதித்தல் (துதித்தனர்) | போற்றுதல் | Praise |
| 2 | பிரதிவாதி | வாதத்தில் எதிராளி | Defendant |
| 3 | மேதை | அறிவாளி | Brilliant person |
| 4 | அருகி | குறைந்து | Decreasing |
| 5 | அடக்கம் | புதைத்தல் | Bury / Sepulture |
| 6 | விவாதம் | வாக்குவாதம் | Discussion |
| 7 | மன்றாடுதல் (மன்றாடி) | கெஞ்சுதல் | Plead |
| 8 | ஊர்தி | வாகனம் | Vehicle |
| 9 | மனோநிலை | மனநிலை | Mood |
| 10 | கோணம் (கோணங்களிலும்) | வழி | Angle |
| 11 | கேலிச் சித்திரம் (கேலிச் சித்திர) | குழந்தைகளுக்கான நகைச்சுவைப் படங்கள் | Cartoon |
| 12 | மனச்சோர்வு (மனச்சோர்வை) | மன அழுத்தம் | Stress |
| 13 | தழுவுதல் (தழுவியது) | ஏற்படுத்துதல் | Approach |
| 14 | பரிந்துரைத்தல் (பரிந்துரைக்க) | எடுத்துக் கூறுதல் | Recommend |
| 15 | அகற்றுதல் (அகற்றி) | வெளியாக்குதல் | Remove |
| 16 | முன்னுதாரணம் (முன்னுதாரணமாக) | அனைவருக்கும் எடுத்துக்காட்டாக | Role model |
| **தேர்வுத்தாள் 2** | | | |
| **எண்** | **அருஞ்சொல்** | **பொருள்** | **English Meaning** |
| 1 | கையேந்துதல் (கையேந்தினான்) | உதவி கேட்டல் | Asking fo help |
| 2 | அகம் | மனம் | Internal |
| 3 | மாமிசம் | இறைச்சி | Meat |
| 4 | உற்பத்தி | தயாரிப்பு | Manufacture |
| 5 | அல்லல்பட | சிரமப்பட | Suffer |

**உயர்நிலை 4 - சாதாரண நிலை தேர்வுப் பயிற்சித்தாள் - தாள் 2 - நிலை 1**
**SECONDARY 4 O-LEVEL REVISION EXAM WORKSHEETS LEVEL 1 - PAPER 2**

## விடைகள்

### தேர்வுத்தாள் 1

**A1 மரபுத்தொடர்களும் இணைமொழிகளும்**

| | | |
|---|---|---|
| Q1 | அவசரக்குடுக்கையாக | (F) |
| Q2 | அள்ளிக் கொடுத்து | (G) |
| Q3 | ஆறப்போடாமல் | (A) |
| Q4 | ஆழம் பார்த்தார் | (B) |
| Q5 | ஈடுகட்ட | (J) |

**A2 முன்னுணர்வு கருத்தறிதல்**

| | | |
|---|---|---|
| Q6 | வழங்குகிறது | (D) |
| Q7 | உறுதுணையாக | (C) |
| Q8 | தவறாக | (B) |
| Q9 | பெருக்கி | (I) |
| Q10 | முக்கியத்துவத்தை | (J) |

WORDSMITH
BEYOND LEARNING
EQ SKILLS = JUMP gRADES + achieve Big

**B3 தெரிவுவிடை கருத்தறிதல்**

| | |
|---|---|
| Q11 | B |
| Q12 | D |
| Q13 | B |
| Q14 | B |
| Q15 | A |

**B4 பிழை திருத்தம்**

| | |
|---|---|
| Q16 | இத்துறையில் |
| Q17 | கொண்டிருக்கின்றனர் |
| Q18 | நாடுகளே |
| Q19 | உலகிற்கு |
| Q20 | அதன் |

**C5 சுயவிடைக் கருத்தறிதல்**

Q21 உலக மக்களைச் சிரிக்க வைத்த சார்லி சாப்ளினின் கற்பனை கதாப்பாத்திரத்திற்கு ஈடாக 'மிக்கி மவுஸ்' மக்களைச் சிரிக்க வைத்துள்ளது. பெரியவர்களும் குழந்தைகளாய் மாறி சிரித்தனர். மேலும், அவர்களின் மனச்சோர்வை நீக்கவும் 'மிக்கி மவுஸ்' காரணமாக அமைந்துள்ளது. இவையே 'மிக்கி மவுஸ்' உலக அளவில் பிரபலமானதன் காரணங்கள் ஆகும்.